



# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa

www.Aagaramuthalaa.com


விளம்பர தொடர்புக்கு

9597887847 / 8870884969

செவ்வாய், ஆகஸ்ட் 17.2021 மலர்:08 இதழ்:05

## தமிழக முதல்வராக பதவியேற்றபின் கோட்டையில் முதல்முறையாக

# மு.க.ஸ்டாலின் தேசிய கொடி ஏற்றினார்

## பல்வேறு துறைகளில் சிறப்பாக செயல்பட்ட சாதனையாளர்களுக்கு விருதுகள் மற்றும் பதக்கங்களை வழங்கி கவுரவித்தார்



நாட்டின் 75 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக முதல்வராக பதவி ஏற்ற பின்னர் சென்னை கோட்டையில் மு.க.ஸ்டாலின் தேசிய கொடியை ஏற்றினார். சாதனையாளர்களுக்கு விருதுகள் மற்றும் பதக்கங்கள் வழங்கி, தியாகிகள் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்தி அறிவித்தார். நாட்டின் 75 வது சுதந்திர தினம் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தேசிய கொடியை ஏற்றி வைப்பதற்கு சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது. காலை 8 மணி முதலே நிகழ்ச்சியில் பங்கேற்க எம்.பிக்கள், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீப் பானர்ஜி, நீதிபதிகள், அரசு மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் ஒவ்வொருவராக வரத்தொடங்கினர்.சுதந்திர தின நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தேசிய கொடி ஏற்றுவதற்காக தனது இல்லத்தில் இருந்து புறப்பட்ட முதல்வர் மு.க.ஸ்டாலினை, போர் நினைவுச் சின்னத்தில் இருந்து அவரது காரின் முன்னும் பின்னும் சென்னை காவல்துறையினர் மோட்டார் சைக்கிள்கள் புடைசூழ விழா நடைபெறும் இடத்திற்கு அழைத்து வந்தனர் சரியாக காலை 8.48 மணிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோட்டை கொத்தளத்திற்கு வந்தார். அவரை அரசு தலைமை செயலாளர் இறையன்பு பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.பின்னர், தென்னிந்திய பகுதிகளின் ராணுவ தலைமைப் பணியாளர் அதிகாரி மேஜர் ஜெனரல் பிரகாஷ் சந்திரா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடற்படை ரியர் அட்மிரல் புனீட் சதா, வி.எஸ்.எம், தாம்பரம் வான்படை அதிகாரி ஏர் கமாண்டர் விபுல் சிங், கடலோரக் காவல்படை கிழக்கு மண்டல இன்ஸ்பெக்டர் ஜெனரல் எ.பி.படோலா, காவல்துறை தலைமை இயக்குனர் சைலேந்திர பாபு, சென்னை பெருநகர காவல் துறை ஆணையர் சங்கர் ஜிவால், கூடுதல் காவல்துறை இயக்குனர் சட்டம் மற்றும் ஒழுங்கு தாமரைக்கண்ணன் ஆகியோரை மரபுப்படி முதலமைச்சருக்கு தலைமை செயலாளர் அறிமுகம் செய்து வைத்தார்.இதை தொடர்ந்து, காலை 8.50 மணிக்கு காவல்துறையின் சம்பிரதாய அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டார். அப்போது, முதலமைச்சர் திறந்த ஜீப்பில் காவல்துறையின் அணிவகுப்பை பார்வையிட்டார். சரியாக 9 மணியளவில் காவல்துறையின் கூட்டுக்குழல் இசை முழங்க, முதல்வர் மு.க.ஸ்டாலின் கோட்டையில் தேசியக்கொடியை ஏற்றி வைத்து வணக்கம் செலுத்தினார். பின்னர், முதல்வர் மு.க.ஸ்டாலின் சுதந்திர தின உரையாற்றினார். நானூறு ஆண்டுகள் பழமை கொண்ட கோட்டையின் பெருமையையும் மாட்சிமையையும் குறிப்பிட்டு, அங்கு விண்முட்ட அமைந்துள்ள கம்பத்தில் கொடியேற்றும் வாய்ப்பினை வழங்கிய தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்தார். சுதந்திர நாளன்று யார் முதலமைச்சராக இருக்கிறார்களோ, அவர்கள்தான் கொடியேற்ற வேண்டும் என்ற சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தவர்தான் கலைஞர் என்னும் வரலாற்றை விரிவாக எடுத்துரைத்தார். மாநில அரசால் விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை 17 ஆயிரம் ரூபாயில் இருந்து 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். குடும்ப ஓய்வூதியத் தொகை 8,500 ரூபாயில் இருந்து 9 ஆயிரம் ரூபாய் ஆக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். சுதந்திர தின விழாவை முன்னிட்டு, முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு துறைகளில் சிறப்பாக செயல்பட்ட சாதனையாளர்களுக்கு விருதுகள் மற்றும் பதக்கங்களை வழங்கி கவுரவித்தார். பின்னர், விருது பெற்றவர்கள் மற்றும் கொரோனா தடுப்பு வீரர்களுடன் முதல்வர் ஸ்டாலின் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

## ஆப்கானிஸ்தானில் அதிகாரத்தை கைப்பற்றியது தலிபான்



ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலில் நுழைந்த நிலையில் அதிகாரத்தைக் கைப்பற்றியது தலிபான். தலிபான்கள் அதிகாரத்தை கைப்பற்றியதால் அமெரிக்கர்களை மீட்டு வருகிறது அந்நாட்டு ராணுவம். அதேபோல், ஆப்கானிஸ்தானில் உள்ள இந்தியர்களை மீட்கும் பணிகள் நடைபெற்று வருவதாக மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காபூல் தூதரகத்தில் இருந்து அமெரிக்க அதிகாரிகள் ஹெலிகாப்டர்கள் மூலம் வெளியேறியதாக தகவல் கூறுகின்றன. ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தனது படைகளை திரும்பப் பெற்ற நிலையில், ஆப்கானிஸ்தானில் பெரும்பாலான இடங்களை தலிபான்கள் கைப்பற்றியது. இந்த நிலையில் 15/08/2021 தலைநகர் காபூலையும் தலிபான்கள் கைப்பற்றிய நிலையில் அதிகாரத்தையும் கைப்பற்றியது. அரசுப் படைகள் முற்றிலும் சரணடைந்ததால் தலிபான்கள் அதிகாரத்தை முழுமையாக கைப்பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரசின் தலைவராக முன்னாள் உள்துறை அமைச்சர் அலி அகமது ஜலாலி நியமிக்கப்பட்டுள்ளார்.

20 ஆண்டுகளுக்கு பிறகு ஆப்கானிஸ்தானில் மீண்டும் ஆட்சி அமைக்கிறது தலிபான், இதனிடையே, ஆப்கானிஸ்தானில் சட்டம்— ஒழுங்கைப் பாதுகாக்க அரசுப் படைகளுக்கு அதிபர் அஷ்ரஃப் கனி அறிவுறுத்திய நிலையில், அவர் தனது பதவியை ராஜினாமா செய்ய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், தலிபான்களுடன் பேசி அமைதியான முறையில் ஆட்சி மாற்றத்திற்கு ஏற்பாடுகள் நடந்து வருவதாக தகவல் கூறுகின்றன. இந்த நிலையில், ஆப்கானை விட்டு எப்படியாவது வெளியேற வேண்டும் என்ற நோக்கத்தில் நகரப் பேருந்துகளுக்கு முண்டியடிப்பது போல் பலர் விமானத்தில் ஏற முயற்சிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இப்படிப்பட்ட சில சம்பவங்களின் வீடியோக்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. அந்தவகையில் வெளியான ஒரு வீடியோவில், விமானத்தின் வெளிப்புறத்தில் தொங்கியபடி நாட்டை விட்டுத் தப்பிக்க முயன்ற இருவர் நடுவானிலிருந்து கீழே விழும் காட்சிகள் பதைபதைப்பை ஏற்படுத்தியுள்ளனகாபூலில் விமான நிலையத்திலிருந்து அமெரிக்க விமானப் படைக்குச் சொந்தமான விமானம் ஒன்று புறப்பட்டது. அந்த விமானத்தில் பயணிக்க முடியாத மக்கள் விமானத்தைப் பின் தொடர்ந்தனர். இதில், இருவர் விமானத்தின் சக்கரத்தில் தொங்கியபடி பயணம் மேற்கொண்டனர். விமானம் உயரே பறந்த நிலையில், பிடிமானத்தை இழந்த இருவர், வானிலிருந்து கீழ் குடியிருப்பு பகுதிகளில் விழுந்துள்ளார். இந்த வீடியோக்கள் இணையத்தில் வெளியாகி பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த வீடியோ காட்சிகள் உலக மக்களைக் கண்ணீர் சிந்த வைத்துள்ளது.

இதே போன்று, மற்றொரு விமானத்தின் மீது பேருந்தில் அமர்வது போல் விமானத்தின் மேல் கூரையில் மக்கள் அமர்ந்திருக்கும் காட்சிகளும் வெளியாகியுள்ளது. இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் ஆப்கானிஸ்தானில் சிக்கியுள்ள தங்கள் நாட்டு மக்களைப் பாதுகாப்பாகத் தாய் நாட்டிற்கு அழைத்து வரும் நடவடிக்கையில் முனைப்புக் காட்டி வருகின்றன . ஆப்கானிஸ்தான் முழுவதும் தலிபான்கள் கட்டுப்பாட்டில் இருந்தாலும், தலைநகரில் உள்ள காபூல் விமான நிலையம் அமெரிக்கப் படையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. உலக நாடுகளின் பார்வை ஆப்கானிஸ்தான் பக்கம் திரும்பியுள்ள போதும். தங்களைக் காக்க எந்த நாட்டினராவது உதவ மாட்டார்களா என்ற ஏக்கத்துடன் காத்துக் கொண்டிருக்கின்றனர் ஆப்கான் மக்கள்.

### ஐ.நா.வேண்டுகோள்




ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறும் அகதிகளை ஏற்றுக் கொள்ளுமாறு உலக நாடுகளுக்கு ஐ. நா. பொதுச் செயலாளர் அண்டோனியோ குத்ரேஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## திமுக அளித்த அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும்

# முதல்வர் மு.க.ஸ்டாலின்



மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசின் முதல் பட்ஜெட் கடந்த ஆகஸ்ட் 13 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டது. இதில், நிதி அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் நிதி நிலை பட்ஜெட் தாக்கல் செய்தார். இதைத்தொடர்ந்து 14 ம் தேதி சட்டசபை வரலாற்றில் முதல்முறையாக வேளாண் துறைக்கு தனி பட்ஜெட்டை வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பட்ஜெட்டை தாக்கல் செய்தார். இதில், பனை தொழிலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.இந்நிலையில், தமிழ்நாடு சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத் பதிலளித்து பேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் எ வ வேலு, ஆட்சிக்கு வந்து நூறு நாட்கள் தான் ஆகிறது.தொடரின் வது நாள் அமர்வு தொடங்கியது. இதில், திண்டிவனம் ராமமூர்த்தி, அய்யாறு வாண்டையார் உள்ளிட்ட மறைந்த முன்னாள் உறுப்பினர்கள் 9 பேருக்கு இரங்கல் குறிப்புகள் வாசிக்கப்பட்டது. மேலும், ஸ்டேன் சுவாமி, வே. ஆனைமுத்து, ஆதீனம், மருத்துவர் காமேஸ்வரன், தமிழறிஞர் இளங்குமரனார் உள்ளிட்டோருக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.இதையடுத்து, திமுக அளித்த வாக்குறுதிகள் நிலை குறித்து எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பிய நிலையில், அவற்றிற்கு தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட அனைத்தும் கட்டாயம் நிறைவேற்றப்படும் என்றார். சொல்வதை செய்வோம், செய்வதை சொல்வோம், சொல்லாததையும் செய்வோம் அதுதான் திமுக அரசு என கூட்டுறவுத்துறை அமைச்சர் ஐ பெரியசாமி கூறினார். இல்லத்தரசிகள் அனைவரும் ஆயிரம் வழங்கும் திட்டம் ஏழையானவர்களுக்கு மட்டுமல்ல, தகுதி வாய்ந்த அனைவருக்கும் வழங்கப்படும் என உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி குறிப்பிட்டர். தொடர்ந்து பேசிய முதலமைச்சர் ஸ்டாலின், திமுக அளித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும். யாருக்கும் சந்தேகம் வேண்டாம் என உறுதியளித்தார்

அகர முதல கவிதைக்களம்

250-க்கும் மேற்பட்ட கவிஞர்கள், தினம் 70-க்கும் மேற்பட்ட படைப்புகள், வாரம் 20-ம், மாதம் 50க்கும் மேற்பட்ட புத்தகப்பரிசுகளும், சான்றிதழ்களும்,

என்றும் தமிழ்ப்பணியில்: அகரமுதல இலக்கிய பேரவை மற்றும் சிவம் அறக்கட்டளை-முகையூர். தொடர்புக்கு: 9597887847

# தமிழக பட்ஜெட் 2021 எந்தெந்த துறைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு?



1) தமிழ் வளர்ச்சித்துறைக்கு ரூ80.26 கோடி ஒதுக்கீடு
2) தொல்லியல் துறைக்கு ரூ29.43 கோடி ஒதுக்கீடு
3) காவல்துறைக்கு 8.9 கோடி நிதி ஒதுக்கீடு
4) நீதித்துறை நிர்வாகத்துக்கு ரூ 1,713 கோடி ஒதுக்கீடு
5) மீன்வளத் துறைக்கு ரூ .303 கோடி ஒதுக்கீடு
6) குடிசை மாற்று வாரியத்துக்கு ரூ 3,954 கோடி ஒதுக்கீடு
7) நெடுஞ்சாலைத்துறைக்கு ரூ.17.899 கோடி ஒதுக்கீடு.
8) மின்சாரத்துறைக்கு ரூ.19,872.77 கோடி ஒதுக்கீடு
9) பள்ளிக்கல்விக்கு ரூ.32,599.54 கோடி ஒதுக்கீடு
10 உயர்கல்வித்துறைக்கு ரூ. 5,369 கோடி ஒதுக்கீடு
11) சுற்றுலாத்துறைக்கு ரூ. 187 கோடி ஒதுக்கீடு
12 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக ஒட்டு மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.4,142 கோடியாக உயர்வு.
13) காலநிலை மாற்ற மேலாண்மை மற்றும் தடுப்பு நடவடிக்கையில் தனிக்கவனம் செலுத்துவதற்காக ரூ.500 கோடி ஒதுக்கீடு.
14) விளையாட்டு மேம்பாட்டிற்கு ரூ.225 கோடி ஒதுக்கீடு.
15) மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூ.18,933 கோடி ஒதுக்கீடு.

# மதுரை ஆதீனம் காலமானார்



சுவாசக் கோளாறால் மதுரை அப்போலோவில் சிகிச்சைப் பெற்று வந்த மதுரை ஆதினம் வயது 77 13/08/2021 அன்று காலமானார். மதுரை ஆதீனத்தின் 292 வது குருமகா சன்னிதானமான அருணகிரிநாதர் ஆகஸ்ட் 9 ஆம் தேதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு வெண்டிலேட்டர் உதவியுடன் செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு வந்த நிலையில், அவர் உயிர் பிரிந்தது. தமிழகத்தில் உள்ள மிகப் பழமையான சைவ திருமடங்களில் ஒன்று மதுரை ஆதீனம். தமிழ்த் தொண்டு, ஆன்மீகத் தொண்டு மற்றும் சமூகப் பணிகளில் மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் ஈடுபட்டு வந்தார். மதுரை ஆதீனத்திற்குரிய மூன்று கோயில்கள் தஞ்சாவூர், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ளன. சைவமும், தமிழும் இரு கண்கள் என்று வாழ்ந்த பெருமைக்குரியவர் மதுரை ஆதீனம், தான் சரி என்று நினைக்கக் கூடிய அரசியல், சமூக கருத்துகளையும் முன் வைத்தவர். முன்னாள் முதலமைச்சர்கள் கலைஞர், ஜெயலலிதாவுடன் நட்பு பாராட்டி வந்தவர் மதுரை ஆதீனம்.

## ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகளுக்கு அடுத்தாண்டு முதல் தடை-மத்திய அரசு அறிவிப்பு!



சுற்றுசூழலுக்கு பாதிப்பு ஏற்படுவதால் பிளாஸ்டிக்கை தடை செய்யவேண்டும் என நீண்டநாட்களாக கோரிக்கை எழுந்து வந்தநிலையில் அடுத்தாண்டு ஜூலை ஒன்றாம் தேதி முதல் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை, உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்யவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் பிளாஸ்டிக் பைகளுக்கான தடிமன் அளவை 50 லிருந்து 120 மைக்ரான்களாக உயர்த்தப்படுவதாகவும் மத்திய அரசு அறிவித்துள்ளது. ஏற்கனவே 50 மைக்ரான் தடிமன் கொண்ட பிளாஸ்டிக் பைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போதைய அறிவிப்பின் மூலம் 120 மைக்ரானுக்கு குறைவாக தடிமன் கொண்ட பிளாஸ்டிக் பைகளுக்கு தடை வரவுள்ளது. இந்த தடை இரண்டு கட்டங்களாக அமலாகவுள்ளது. இந்தாண்டு செப்டம்பர் 30 ஆம் தேதி முதல் 75 மைக்ரான்களுக்கு குறைவான தடிமன் கொண்ட பிளாஸ்டிக் பைகளுக்கும், அடுத்தாண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை 120 மைக்ரானுக்கு குறைவாக தடிமன் கொண்ட பிளாஸ்டிக் பைகளுக்கும் தடை அமலாக உள்ளது.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

அகர முதல
உரக்க சொல்வோம்
Aagaramuthalaa
தொடர்புக்கு
9597887847
8870884969
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு





# அகர முதல

Aagaramuthalaa

மின்னிதழ்

www.Aagaramuthalaa.com



விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969




# கடலூர் மாவட்ட செய்திகள்

## சுதந்திர தின விழா கடலூர் மாவட்ட ஆட்சியர் தேசியக் கொடியை ஏற்றினார்

### 131 அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழை மாவட்ட ஆட்சியர் கி.பாலசுப்பிரமணியம் வழங்கினார்








இந்தியாவின் 75 ஆவது சுதந்திர திருநாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக கடலூர் மாவட்டம் அண்ணா விளையாட்டு அரங்கில் மாவட்ட ஆட்சியர் கி. பாலசுப்ரமணியம் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து, காவல் துறையின் மரியாதையை ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து சமாதான புறாக்காளை பறக்கவிட்டு, மூவர்ண நிறத்திலான பலூன்களை பறக்கவிட்டார்.கொரோனா பேரிடர் காலத்தில் சிறப்பாக பணிபுரிந்த அலுவலர்கள், கொரோனா நோய் தடுப்பு பணியில் சிறப்பாக பணிபுரிந்தவர்கள், கொரோனா நோய் தடுப்பு பணியில் சிறப்பாக பணியாற்றிய முன்களப் பணியாளர்கள், வடகிழக்கு பருவ மழை மற்றும் கொரோனா நோய் தொற்று காலங்களில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 ன் போது சிறப்பாக பணிபுரிந்த அலுவலர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பாக பணிபுரிந்த 131 அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் கி.பாலசுப்ரமணியம் பாராட்டி சான்றிதழ் வழங்கி ஊக்கப்படுத்தினார். கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையின் காரணமாக சுதந்திர போராட்ட தியாகி கடலூர் திருப்பாதிரிபுலியூரை சேர்ந்த இராமாமிர்தம் இல்லத்திற்கு மாவட்ட ஆட்சியர் கி.பாலசுப்ரமணியம் நேரில் சென்று பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். மேலும், சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் வாரிசுதாரர்கள் வசிக்கும் இல்லங்களுக்கு அந்தந்த பகுதியை சேர்ந்த வட்டாட்சியர்கள் மூலம் இல்லத்திலேயே பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. கொரோனா தொற்று பரவல் காரணமாக இவ்விழாவில் பாராட்டு சான்றிதழ் பெற வருகை புரிந்தவர்களுக்கு சமூக இடைவெளி கடைபிடிக்கப்பட்டு இருக்கைகள் அமைக்கப்பட்டிருந்தன. பொதுமக்கள் தங்கள் இல்லங்களில் இருந்து சுதந்திர தினவிழாவினை உள்ளூர் தொலைக்காட்சி மூலம் கண்டுகளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்விழாவிற்கு வருகை புரிந்தவர்களுக்கு கிருமிநாசினி மற்றும் முககவசங்கள் வழங்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.இவ்விழா வில், சிறப்பு விருந்தினராக கடலூர் சட்டமன்ற உறுப்பினர் ஐய்யப்பன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சக்திகணேசன், கூடுதல் ஆட்சியர் வருவாய்) ரஞ்ஜித்சிங், கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி மற்றும் திட்ட இயக்குநர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது டெய்சிகுமார் வருவாய் கோட்டாட்சியர் அதியமான் கவியரசு இணை இயக்குநர் மருத்துவம்) மருத்துவர் ரமேஷ்பாபு வட்டாட்சியர்கள் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




## கடலூரில் உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டம்:

# ரூ.49.51 லட்சத்தில் நல உதவி



கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் கி.பாலசுப்பிரமணியம் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாநில வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்று நலத் திட்ட உதவிகளை வழங்கினார் மாவட்டத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட 19,116 மனுக்களும் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன.அவற்றில் 108 பயனாளிகளுக்கு பல்வேறு துறைகளின் கீழ் ரூ.49.51 லட்சம் மதிப்பீட்டில் நலத் திட்ட உதவிகள் நிகழ்ச்சியில் வழங்கப்பட்டன. எம்எல்ஏக்கள் சபா.ராஜேந்திரன்,நெய்வேலி, எம்.ஆர்.ராதாகிருஷ்ணன், விருத்தாசலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசியதாவது, திமுக தேர்தல் நேரத்தில் அறிவித்த இந்தத் திட்டத்தின்படி கடலூர் மாவட்டத்தில் 19,116 மனுக்களை பொதுமக்கள் அளித்தனர் அந்த மனுக்களுக்கு 100 நாள்களில் தீர்வு காண தனித் துறை அமைக்கப்பட்டது. மாவட்டத்தில் 19,116 மனுக்களும் 90 நாள்களில் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றில் 48.6 சதவீத மனுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. கரோனாவை கட்டுப்படுத்தும் பணியுடன் இந்தப் பணிகளையும் மேற்கொண்ட அரசு அலுவலா களை பாராட்டுகிறேன் என்றார் அவர்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளா சி.சக்திகணேசன், கூடுதல் ஆட்சியர், வருவாய் ரஞ்ஜித்சிங் கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி பவன்குமார் ஜி.கிரியப்பனவர் வருவாய் கோட்டாட்சியர் அதியமான் கவியரசு, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் ப.ஜெகதீஸ்வரன், தனித் துணை ஆட்சியர் எஸ்.பரிமளம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

## என்.எல்.சி லாரி மோதி ஒருவர் உயிரிழப்பு!
# லாரிகளுக்குத் தீ வைத்து எரித்ததால் பதற்றம்!



நெய்வேலி என்.எல்.சியில் சாம்பல் ஏற்றிச்சென்ற லாரி மோதியதில் ஒருவர் உயிரிழந்ததால் ஆத்திரமடைந்த பொதுமக்கள், அங்கு நின்றிருந்த லாரிகளுக்குத் தீ வைத்து எரித்து கண்ணாடிகளை அடித்து நொறுக்கியதால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டிருக்கிறது. கடலூர் மாவட்டம், நெய்வேலி மேலகுப்பத்தைச் சேர்ந்த குப்புசாமி என்பவரின் மகன் கோவிந்தன், என்.எல்.சி நிறுவனத்தின் இரண்டாம் அனல்மின் நிலையத்தில் ஒப்பந்தத் தொழிலாளராகப் பணியாற்றிவரும் இவர், தன் மனைவி திலகவதியுடன் கோயிலுக்குச் சென்றுவிட்டு தனது இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தார். அப்போது என்.எல்.சியிலிருந்து ஜெயங்கொண்டத்தில் இருக்கும் சிமெண்ட் தொழிற்சாலைக்கு சாம்பலை ஏற்றிச் சென்ற லாரி ஒன்று குப்புசாமிதிலகவதி தம்பதியர் மீது மோதியது. அதில் இருவரும் நிலை தடுமாறி கீழே விழுந்ததால் லாரியின் முன் சக்கரத்தில் சிக்கினார்கள். அதில் கோவிந்தன் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தார். படுகாயங்களுடன் உயிர் பிழைத்த அவர் மனைவி திலகவதி சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். விபத்து குறித்து கேள்விப்பட்டு அங்கு திரண்ட அந்தப் பகுதி மக்கள் அங்கு சாம்பல் ஏற்றுவதற்காக நின்றிருந்த ஐந்து லாரிகளுக்கு தீ வைத்து எரித்தனர். அத்துடன் வரிசையாக நின்றிருந்த சுமார் ஐந்துக்கும் மேற்பட்ட லாரிகளின் கண்ணாடிகளையும் அடித்து உடைத்தனர். அதனால் அந்தப் பகுதியில் பதற்றம்.தகவல் அறிந்து அங்கு சென்ற காவல்துறையினர் கலவரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். அதேபோல தீயணைப்புத்துறையினரும் விரைந்து வந்து எரிந்துகொண்டிருந்த லாரிகளை அணைத்தனர். அதேசமயம் உயிரிழந்த கோவிந்தனின் உடலை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்ப காவல்துறையினர் முயன்றனர். ஆனால் கோவிந்தனின் உடலை எடுக்க அனுமதிக்காத அவருடைய உறவினர்களும் ஊர் மக்களும் என்.எல்.சி நிர்வாகம் அவருடைய குடும்பத்தினருக்கு உரிய இழப்பீட்டை அறிவிக்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## திட்டக்குடி அருகே நெல் கொள்முதல் நிலையம் மூடல்:தாசில்தார் முன்பு நெல்லை கொட்டி விவசாயிகள் போராட்டம்.



திட்டக்குடி அருகே தர்மக்குடிக்காடு மெயின் ரோட்டில் அரசு நெல் கொள்முதல் நிலையம் உள்ளது. இங்கு திட்டக்குடி மற்றும் சுற்றுப்புற பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் தங்களது நிலத்தில் விளைந்த நெல்லை கொண்டு வந்து விற்பனை செய்வார்கள். அந்த வகையில் தற்போது அறுவடை செய்யப்பட்ட நெல்லை விற்பனை செய்வதற்காக நெல் கொள்முதல் நிலையத்தில் விவசாயிகள் மூட்டைகளாக வைத்திருந்தனர். டோக்கன் அடிப்படையில் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு நெல் கொள்முதல் நிலையம் திடீரென மூடப்பட்டது. இதனால் விற்பனை செய்வதற்காக டோக்கன் வாங்கியிருந்த விவசாயிகளின் நெல்முட்டைகள் அனைத்தும் நெல் கொள்முதல் நிலையத்திலேயே அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. நெல் கொள்முதல் நிலையத்தை திறந்து நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்து வந்தனர். இருப்பினும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிகிறது. இந்த நிலையில் திட்டக்குடி பகுதியில் பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக நெல் கொள்முதல் நிலையத்தில் வைத்திருந்த நெல் மூட்டைகள் மழையில் நனைந்து சேதமானது. இதனால் ஆத்திரமடைந்த விவசாயிகள் இ அறுவடை செய்யப்பட்ட நெல்லை கொள்முதல் செய்ய வலியுறுத்தி சாலை மறியலில் ஈடுபட முயன்றனர். இதுபற்றி தகவல் அறிந்த திட்டக்குடி தாசில்தார் தமிழ்செல்வி, சப்—இன்ஸ்பெக்டர் சந்துரு தலைமையிலான போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். அப்போது விவசாயிகள் சிலர் திடீரென தாசில்தார் தமிழ்செல்வி மற்றும் அவருடைய வாகனத்தின் முன்பு நெல்லை கொட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து தாசில்தார் தமிழ்செல்வி விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது நெல் கொள்முதல் நிலையத்தில் உள்ள நெல்மூட்டைகளை உடனடியாக கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசி நெல்லை கொள்முதல் செய்ய உரிய நடவடிக்கை எடுப்பதாக தாசில்தார் தமிழ்செல்வி தெரிவித்தார். இதையேற்று விவசாயிகள் போராட்டத்தை கைவிட்டனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## வடலூரில் புதிய அரசு தோட்டக்கலை பூங்கா



கடலூர் மாவட்டம் வடலூரில் ரூ.1 கோடியில் புதிதாக அரசு தோட்டக்கலை பூங்கா அமைக்கப்படும். தோட்டக்கலை பயிர்கள் அதிகமாக விளையும் மாவட்டங்களில் தோட்டக்கலை கிடங்கு அமைக்கப்படும். திருவள்ளூரில் கீரை, மிளகாய், கடலூரில் முந்திரி, பலா, நாமக்கல்லில் மிளகு, வெங்காய கிடங்கு அமைக்கப்படும். தென்காசியில் எலுமிச்சை, நெல்லி கிடங்கு அமைக்கப்படும் என்று வேளாண்துறை பட்ஜெட்டில் அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்

## விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் செல்போன் பேசிக்கொண்டே நோயாளிக்கு அலட்சியமாக ஊசி போடும் செவிலியர்



கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் செல்போன் பேசிக் கொண்டே அலட்சியமாக செவிலியர் ஒருவர் நோயாளிக்கு ஊசி செலுத்தும் புகைப்படங்கள் வைரலாகி வருகிறது.விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்கு சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து ஏராளமானோர் சிகிச்சைக்கு வருகின்றனர். இந்த நிலையில், மருத்துவமனையில் இரவுப் பணியில் இருந்த செவிலியர் ஒருவர் நோயாளிக்கு செல்போன் பேசிக் கொண்டே ஊசி செலுத்தியுள்ளார். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட செவிலியரிடம் தலைமை மருத்துவர் எழிலரசி உள்ளிட்ட அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## புவனகிரி அருகே குழாய் உடைப்பு குடிநீர் வினியோகம் பாதிப்பு.!



புவனகிரி அருகே குழாய் உடைக்கப்பட்டதால் குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த கிராம மக்கள் சாலையோர தடுப்புச்சுவர் அமைக்கும் பணியை தடுத்து நிறுத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. புவனகிரி அருகே மேல் புவனகிரி ஒன்றியம் மேலமூங்கிலடி ஊராட்சியில் கிராம சாலை பராமரிப்பு திட்டத்தின் கீழ் மேலமூங்கிலடியில் இருந்து தையாகுப்பம் வரை பெரிய பாசன வாய்க்காலையொட்டி சாலை அமைக்க முடிவு செய்யப்பட்டது. முதற்கட்டமாக ரூ.20 லட்சம் செலவில் சாலையோரம் 40 மீட்டர் தூரம் வரை தடுப்புச்சுவர் அமைக்கும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்தநிலையில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்காக தொழிலாளர்கள் பள்ளம் தோண்டியபோது, அந்த வழியாக செல்லும் குடிநீர் குழாய் உடைந்து சேதமானது. இதனால் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டது.இதனால் ஆத்திரமடைந்த கிராம மக்கள் ஊராட்சி மன்ற தலைவர் ராஜராஜன் தலைமையில் தடுப்புச்சுவர் அமைக்கும் இடத்துக்கு திரண்டு வந்தனர். பின்னர் அவர்கள் சேதமடைந்த குழாயை சீரமைத்து தடையின்றி குடிநீர் வினியோகம் செய்யக்கோரி தடுப்புச்சுவர் அமைக்கும் பணியை தடுத்து நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.இதற்கிடையே சேதமடைந்த குடிநீர் குழாய் சீரமைக்கப்பட்டதோடு, குடிநீர் வினியோகம் செய்ய ஒன்றிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டனர். இதையடுத்து கிராம மக்கள் போராட்டத்தை கைவிட்டு, அங்கிருந்து கலைந்து சென்றனர். இந்த சம்பவத்தால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

## சிதம்பரத்தில் குட்கா மற்றும் போதைப் பொருள் விற்றவர் கைது.



சிதம்பரத்தில் குட்கா மற்றும் போதை பொருள் சாக்லேட் விற்பனை செய்த ஒருவரை போலீசார் கைது செய்தனர் அவரிடம் இருந்து 63 கிலோ குட்கா மற்றும் போதை சாக்லேட் பறிமுதல் செய்யப்பட்டது. சிதம்பரம் நகரில் குட்கா மற்றும் போதை பொருள் விற்பனை செய்யப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது பெயரில் சிதம்பரம் நகர போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் சப் இன்ஸ்பெக்டர் சுரேஷ்குமார் மற்றும் போலீசார் சிதம்பரம் பகுதியில் உள்ள கடைகள் அதிரடி சோதனை நடத்தினர். அப்போது சின்ன மார்க்கெட்அங்குள்ள ஒரு கடையில் குட்கா மற்றும் போதைப் பொருட்கள் விற்பனை செய்த தெரியவந்ததையடுத்து உரிமையாளரின் விசாரித்த காவல்துறை யினர் உத்திரபிரதேசம் மாநிலம் மாவட்ட லாபன் மாவட்டம் சேர்ந்த தர்மராஜ் என்பவரை கைது செய்தனர் மேலும் அவர் வீட்டில் பதுக்கி வைத்திருந்த 63கிலோ குட்கா பறிமுதல் செய்தனர்விற்பனை செய்தவரை போலீசார் கைது செய்தனர்.

## வடலூர் பேரூராட்சியில் பராமரிப்பின்றி வீணாகும் வாகனங்கள்



வடலூர் பேரூராட்சிக்கு வழங்கப்பட்ட குப்பை அள்ளும் வாகனங்கள் உரிய பராமரிப்பின்றி ஒரே இடத்தில் நிறுத்தப்பட்டுள்ளதால் வீணாகி வருகின்றன. வடலூர் பேரூராட்சியில் மொத்தம் 18 வார்டுகள் உள்ளன. தூய்மைப் பணியாளா கள் பேரூராட்சியில் குறுகிய சாலைகளில் சென்று குப்பைகளை சேகரிக்க வசதியாக தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சிறிய வாகனங்கள் வழங்கப்பட்டன. இவற்றில் 2 வாகனங்கள் நீண்ட நாள்களாக உரிய பராமரிப்பு, பயன்பாடின்றி பேரூராட்சி அலுவலக வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு வீணாகி வருகின்றன, இதுகுறித்து பேரூராட்சி அலுவலர் ஒருவர் கூறுகையில், இந்த வாகனங்களில் மின்கலன்கள் பழுதாகிவிட்டன. இதை சரிசெய்ய உரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

அகர முதல
தொடர்புக்கு 9597887847 8870884969
Aagaramuthalaa aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு